

தெற்கு சூடான் ஜூபா என்ற இடத்திலிருந்து, தமிழகத்திற்கு திரும்பிய குமரி மாவட்டம் மற்றும் பிற மாவட்டங்களை சார்ந்த தமிழர்களை கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், நாகர்கோவில், வடிவீஸ்வரம் பிராமன சமுதாய திருமண மண்டபத்தில் இன்று (15.07.2016) வரவேற்றார். நாகர்கோவில் கோட்டாட்சியர் திரு. ஆர். ராஜ்குமார் உடனுள்ளார்.

செ.வெ.எண்: 454/2016 நாள்: 15.07.2016

**தெற்கு சூடானிலிருந்து தமிழகத்திற்கு திரும்பிய குமரி மாவட்டம் மற்றும் பிற மாவட்டங்களை சார்ந்த தமிழர்களை கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், இன்று (15.07.2016) வடிவீஸ்வரத்தில் வரவேற்றார்.**

ஆப்பிரிக்க நாடான தெற்கு சூடான் ஜூபா என்ற இடத்தில் கடந்த சில மாதங்களாக நடந்த உள்நாட்டு பிரச்சனையால், அங்கு பல்வேறு தொழிலில் ஈடுபட்டிருந்த இந்தியர்கள் பாதிக்கப்பட்டிருந்தனர். இவர்களை மீட்பதற்காக அரசால் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வந்தது.

அதனடிப்படையில் இன்று 23 தமிழர்கள் திருவனந்தபுரம் விமான நிலையத்திற்கு வந்தனர். இதில் 11 நபர்கள் சொந்த ஊர்களுக்கு திரும்பினார்கள். மேலும் மீதி உள்ள நபர்களை துணை ஆட்சியர் (சிறப்பு திட்டங்கள்) திரு. ரவி அவர்கள் தலைமையிலான குழு ஒன்று அமைக்கப்பட்டு, திருவனந்தபுரம் விமான நிலையத்திலிருந்து கன்னியாகுமரி மாவட்டம், இடலாக்குடியை சார்ந்த திரு. அக்பர்அலி மற்றும் திரு. சுபன் என 2 நபர்களும், திருச்சியை சார்ந்த 6 நபர்களும், மதுரையை சார்ந்த 3 நபர்களும், நெல்லை மாவட்டத்தை சார்ந்த ஒரு நபர் என மொத்தம் 12 நபர்களை, வடிவஸ்வரம் கிராமம், பிராமன சமுதாய திருமண மண்டபத்திற்கு அரசு பேருந்து-ன் மூலம் அழைத்து வரப்பட்டது. இவர்களை கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் இன்று (15.07.2016) நேரில் சந்தித்து, வரவேற்று, இவர்களுக்கு தேவையான உணவு வழங்கிட உத்தரவிட்டுள்ளார்கள்.

அதனை தொடர்ந்து தாயகத்திற்கு திரும்பிய தமிழர்கள் அனைவரும், பெரும் முயற்சி மேற்கொண்ட தமிழக அரசுக்கு நன்றி தெரிவித்து கொண்டனர். பின்னர் அனைவரும் அவர்களது சொந்த ஊருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

நிகழ்ச்சியில் நாகர்கோவில் கோட்டாட்சியர் திரு. ஆர். ராஜ்குமார், துணை ஆட்சியர் திரு. ரவி, வட்டாட்சியர்கள் திரு. எ.வி. மூர்த்தி, திரு. அனில்குமார் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,கன்னியாகுமரி மாவட்டம்.